**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 – (கட்டம் II) - 2018**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சீனா அபிவிருத்தி வங்கி (சீடிபீ) கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 24 ஆம் திகதிய 4510201401100000587 ஆம் இலக்க கடன் உடன் படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் முன்னால் துறைமுகங்கல் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. முத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் கிழக்கு மாகாணங்களிளுள்ள 09 வீதி பிரிவுகளின் 131.50 கி.மீ களை புனரமைத்து மேம்படுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,628 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 81.75 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 ஜூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் பூர்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்புதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது நிதிச் சுற்றறிக்கை இல 05/2016 மற்றும் நிதிப்பிரமாணம் இல. 756. | இருப்புக்களின் மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் மதிப்பாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவுமில்லை. | பலவீனமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை. | அனைத்து மதிப்பீட்டு விபரங்கள் மற்றும் அட்டவணைகள் தற்போது செயற்திட்ட காரியாலயத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 திசெம்பர் 29 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல 06/2015. | ஒரு செயற்பாட்டு திட்டம் அவைகளின் பகிர்ந்தளிக்கப்பட்ட கடமைகள் மீதான தனிப்பட்ட வெளியீடுகளை அடையாளப்படுத்த தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரதான செயலாற்றல் குறிகாட்டி மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகளின் தடையற்ற செயற்பாட்டிற்கான ஒரு நேரான பாதை 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பலவீனமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை. | திட்டத்தின் அட்டவணை வடிவம் RDA இன் திட்டமிடல் பிரிவின் தேவைப்பாடுகளுடன் நேரத்திற்கு நேரம் மாற்றமடைந்திருந்தது. MS செயற்திட்டத்தினை பயன்படுத்தி செயற்திட்டத்தின் செயற்பாட்டுத் திட்டம், நேரான / இலகுபாதை மற்றும் பட்டியலிடப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை நாங்கள் தயாரித்திருந்தோம். எனவே, இலகுபாதை உள்ளடங்கலான அனைத்து பிரதான நடவடிக்கைகளும் செயற்திட்ட காரியாலயத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல 751. | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் செயற்திட்ட காரியாலயங்களுடன் தொடர்புபட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒரு மேம்படுத்தப்பட்ட முறையில் செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் இழப்புக்களை அடையாளம் கான்பது கடினமாகும். | மதிப்பீகள் கள அலுவலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களிற்கு 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கு செய்யப்பட்டிருந்தது. அனைத்து மதிப்பீட்டு பட்டியல்களும் PD இன் அலுவலகத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**3.　பௌதீக முன்னேற்றம்**

-------------------------------

**3.1　செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

-----------------------------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஆரம்ப திட்டத்தின் பிரகாரம், 20 தேசிய வீதிகளின் 128.10 கிலோமீற்றர்களின் புனர்நிர்மான வேலைகள் செயற்திட்ட காலப்பகுதிக்கு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2018 ஜனவரி 01 இல் உள்ளவாறு 20 தேசிய வீதிகளில் 11 வீதிகள் 80 சதவீதத்திற்கு அதிகமாகவும் 5 வீதிகள் 75 சதவீதத்திற்கு அதிகமாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இது குறித்தான செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் செலவீடுகள் ரூபா 45 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 81 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. செலவீடுகள் அதிகரித்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்காக காணப்படவில்லை. | செயற்திட்டத்தினால் தேவையற்ற செலவினங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | 2017 ஆம் ஆண்டின் போது, செயலாற்றல் 80 சதவீதமாக அடையப் பெற்றிருந்தது. 2017 இல் உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தின் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் தேவைப்பாடுகளுடன் வேலை செய்தனர். இருப்பினும், 2018 ஆம் ஆண்டில் நிர்மான நடவடிக்கைகள் உச்சத்திலிருந்ததுடன் நாங்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணிகளின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு மிகுதி அனைத்து உத்தியோகத்தர்களையும் வேலைக்கமர்த்த வேண்டும். | வீதி வேலைகளின் மிகுதி புனர்நிர்மானத்தினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் செயலாற்றல் பாதுகாப்பினை சரியான செயலாற்றலிற்காக அவரது சொந்த செலவில் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தும், செயற்திட்டமானது செயலாற்றல் உத்தரவாதப் பத்திரத்தினை வழங்குவதற்கான செலவினை மீளப் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக அளவைப் பட்டியலில் ஒரு தனியான கொடுப்பனவு உருப்படியாக காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது ஒப்பந்ததாரரின் சொந்த செலவில் செய்யப்படல் வேண்டும். அதன்படி, மொத்தமாக ரூபா 15 மில்லியன் ஒரு புறநடையான கொடுப்பனவாக உருப்படி 108.1(1) இன் கீழ் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகள். | இவ் உருப்படி உள்ளடக்கப்பட்டிராவிட்டால், ஒப்பந்ததாரர் இக் கிரயத்தை வேறு விகிதங்களில் உள்ளடக்கியிருக்கலாம். மேலும், அதன் பெறுபேறாக விகிதம் அதிகரித்திருக்கலாம். எனவே, கொடுப்பனவு உருப்படி 108.1(1) உடனான பீஓகியுவ் இல் காணப்படும் ஏற்பாடுகளின் கீழான இருக்கக் கூடிய கொடுப்பனவு ஒரு புறநடையான கொடுப்பனவு அல்ல. | மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகார சபை ரூபா 65,000 மாதாந்த சம்பளத்திற்கு சமூக மற்றும் சுற்றாடல் இணக்கப்பாடு மற்றும் காணி சுவிகரிப்பு வேலைகளுக்கான ஆலோசகரை நிறுவியிருந்தது. 2018 ஜூலை 31 வரை மொத்தமாக ரூபா 447,500 ஆலோசகரிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணி சுவிகரிப்பு வேலைகள் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் | தேவையற்ற உத்தியோகத்தரகளின் வேலைக்கமர்த்தல் காரணமாக கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | செயற்திட்டமானது காணி சுவிகரிப்பு செயன்முறையை கருத்தில் கொள்ளவில்லை. இது செயற்திட்டத்தின் வீதி அகலப்படுத்தலிற்கான மேலதிக காணிகள் உரிய காணி உரிமையாளர்களின் நன்கொடை அடிப்படையாக கருதப்பட்டிருந்தது. இவ் இலக்கிற்காக மிக நீண்ட கலந்துரையாடல் பல்வேறு தரப்பினர்களுடன் செய்ய வேண்டியிருந்ததுடன் செயற்திட்டத்திற்கு நிறுவப்பட்ட | தேவையற்ற உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆலோசகர்கள் அவர்களது பங்களிப்பினை வழங்கியிருந்தனர். மேலும், காணி உரிமையாளர்களின் சம்மதத்தை பெற்றுக்கொள்ள அப்பகுதி அரசினை சாதகமாகக் கையாண்டனர்.